

தஞ்சை மத்திய மாவட்டம் திருவோணம் ஒன்றிய முன்னாள் இளைஞரணி அமைப்பாளரும் கழகத்தின் செயல்வீரருமான எம்.வி.அண்ணாதுரை அவர்கள் மறைவெய்திய நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவோணம் மேனட்ராயன்விடுதியில் உள்ள அவரது இல்லம் சென்று, அவரது திருவுடலுக்கு மாலை வைத்து இறுதி மரியாதை செலுத்தி, அண்ணாதுரை அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தார் நண்பர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.



தஞ்சை மாவட்டக் கழக முன்னாள் அவைத் தலைவரும் பட்டுக்கோட்டை நகர்மன்ற முன்னாள் துணைத் தலைவருமான ஹாஜா என்கிற அ.அப்துல் சமது அவர்கள் உடல்நலக்குறைவால் மறைந்தார். இச்செய்தி அறிந்ததும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மறைந்த ஹாஜா என்கிற அ.அப்துல் சமது அவர்கள் உடல்மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினர் நண்பர்கள் கழகத்தினருக்கு ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்தார்.

இந்த ஆட்சியில் மக்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது!

தமிழக வெற்றிக் கழகத்தில் 60 முதல் 70 எம்.எல்.ஏ.க்கள் அதிருப்தியில் உள்ளனர்!

புதுக்கோட்டையில் முன்னாள் அமைச்சர் ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, நவ.4-

புதுக்கோட்டையில் 23.5 கோடி ரூபாய் மதிப்பில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டது. இதன் திறப்பு விழா நேற்று நடை பெற்றது. முதல்வர் விஜய் நேற்று பேருந்து நிலை யத்தை திறந்து வைத்து பல் வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

இந்த நிலையில் பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டு விழா மற்றும் நிதி ஒதுக்கியது தி.மு.க. அரசு தான் என்றும் தமிழக வெற்றிக்கழக அரசு எதுவும் செய் யவில்லை. நாங்கள் தீட்டிய திட்டத்திற்கு இந்த அரசு ஸ்டிக்கர் ஒட்டுகிறது என்று கூறி நேற்று முன்தினம் தி.மு.க. சார்பில் இனிப்பு கள் வழங்கி பட்டாசுகள் வைத்து கொண்டாடப் பட்ட நிகழ்வில் காவல் துறைக்கும் தி.மு.க.விற்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற் பட்டது. இதனால் பரபரப் பான சூழ்நிலை ஏற்பட்டி ருந்தது இந்த நிலையில் நேற்று திறப்பு விழா முடிந்த பிறகு மாலை முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் தி.மு.க.வினர் புதிய பேருந்து நிலையத் திற்கு வந்து பட்டாசுகள் வெடித்து, இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். மேலும் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணி களை முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலா ளர் கே.கே.செல்லப்பாண்டி ரின், டாக்டர் வை.முத்து ராஜா எம்.எல்.ஏ உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பார்வை யிட்டனர்.



இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய எஸ்.ரகுபதி

இந்த அரசில் எந்த திட்ட மும் நிறைவேற்றப்பட வில்லை நாங்கள் கொண்டு வந்த திட்டத்தை தான் முடித்த பணிகளை இவர் கள் இன்று திறப்பு விழா காண்கிறார்கள். மேலும் இந்த ஆட்சியில் ஏமாற்றம் தான் மிதியுள்ளது. இன்று புதிய பேருந்து நிலையத்தில் திறந்த பிறகு நலத்திட்ட உத விகளை மாவட்ட ஆயுத படை மைதானத்தில் நடப் பதாக இருந்தது. ஆனால் திடீரென்று அது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டது பல கோடி ரூபாய் செலவில் பிரம் மாண்ட பந்தல் அமைக்கும் பணியும் மேடை அமைக் கும் பணியும் நடைபெற்ற நிலையில் திடீரென்று இந்த இடம் ரத்து செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவ லகத்திற்கு மாற்றப்பட்ட தால் பல கோடி ரூபாய் அர சுக்கு இழப்பு ஏற்பட் டுள்ளது. இதேபோன்று முதல்வர் காணொளி காட்சி மூலமாக இதை திறந்து இருக்கலாம் அவ் வாறு திறந்து இருந்தால் 10 கோடி ரூபாய் அளவில் அர சிற்கு மிச்சமாயிருக்கும். இந்த நிதியை பயன்படுத்தி பள்ளிகளின் வளர்ச்சி நிதிக் காக பயன்படுத்தியிருக்க லாம்.

சிறைத்துறை சார்பில் நடத்தப்பட்ட பெட்ரோல் பங்குகள் மூடும் நடவடிக் கையை அரசு எடுத்துள்ளது.

சட்டத்துறை அமைச் சரை தனியார் பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள் சந் தித்து சிறைத்துறை பெட் ரோல் பங்குகளால் தங்க ளுக்கு நவுடம் ஏற்படுகிறது என்று தெரிவித்ததை தொடர்ந்து தான் இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என்று தற்போது லேசாக தகவல் கசிந்துள்ளது.

பிரிசன் பஜாரையும் மூடி யுள்ளனர். சிறையில் இருந்து தப்பித்தவர்களுக் கும் சிறைத்துறை பெட் ரோல் வங்கியில் பணிபுரி யும் ஆயுள் தண்டனை கைதிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இவர்கள் தப் பித்தால் எல்லாம் சொல்ல மாட்டார்கள். இது போன்ற பொய்யான வதந்தியை கிளப்பி விட்டு அதன் மூல மாக சிறைத்துறை பெட் ரோல் பங்கை மூட நட வடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

திமுக ஆட்சிக்காலத்தில் நிதி ஒதுக்கப்பட்டு கட்டப் பட்ட புதிய பேருந்து நிலை யம் என்று கூறியதற்கு அமைச்சர் முகமது பர்வேஸ் அவர்கள் பணத்திலா செய் தார்கள் மக்கள் பணத்தில் தான் செய்தார்கள் என்று விமர்சனம் செய்துள்ளார். அவர் சிறிய பையன் அரசி யல் தெரியாது அதனால் அவருக்கு அரசியல் தெரிய வில்லை அரசியலை தெரிந்து கொண்டு அவர் பேச வேண்டும்.

காலையில் தான் கொடுத்த அறிக்கையை படித்து விட்டு தான் தமிழ் நாடு சிறைத்துறை நடவ டிக்கை மேற்கொண்டுள்ளது அது நான் கொடுத்த அறிக் கைக்கு கிடைத்துள்ள வெற்றி.

எங்கள் ஆட்சியில் சிறை துறை பாதுகாப்பாக இருந் தது. அங்கு வழங்கும் சாப் பாடு தரமாக இருந்தது. சாப்பாட்டை கூட முறை யாக கொடுக்கவில்லை என்று தற்போது தேனி சிறையில் இருந்து தப்பிய கைதிகள் தெரிவித்துள்ள னர். சிறையில் உள்ள கைதிகள் மீதும் அக்கறை கொண்டு இருந்த அரசு தான் திராவிட மடல் அரசு.

அ.தி.மு.க., தி.மு.க. சேர்ந்தது என்று சொல்லி தவெக கிளப்பும் பொய் யான வதந்தி. குட்டையை குழப்பி மீன் பிடிக்க பார்க் கின்றனர்.

அ.தி.மு.க., தி.மு.க. எக் காலத்திலும் ஒன்று சேராது. இது வதந்தி. த.வெ.க. பரப் பிய மிகப்பெரிய வதந்தி இது 60லிருந்து 70 பேர் சட்டமன்ற உறுப்பினர்கள் த.வெ.க. கட்சியில் அதிருப் தியில் இருக்கிறார்கள் என்று தகவல் வருகிறது அவர்கள் வேண்டுமென்றால் நம் பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்தாலும் வரு வார்கள்.

இவ்வாறு அவர் பேட்டி யில் தெரிவித்துள்ளார்.

வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ., தலைமையில்

கோவையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், மாவட்டச் செயலாளர்கள் தளபதி முருகேசன், தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை!

கோவை, நவ.4-

கோவையில் நடை பெறும் பல்வேறு நிகழ்ச்சி யில் கலந்து கொள்ள கோவைக்கு வருகை தரும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்க ளுக்கு கழக மேற்கு மண் டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்ட மன்ற உறுப்பினர், முன் னாள் அமைச்சர் வி.செந் தில் பாலாஜி தலைமை யில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது என்று கோவை மாநகர் மாவட் டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன், கோவை தெற்கு மாவட் டச் செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்டச் செய லாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளனர்.

கழகத் தலைவர் முத்து வேல் கருணாநிதி ஸ்டா லின் அவர்கள் இன்று (04.11.2026, புதன்கிழமை) திராவிடர் கழகம் சார்பில் கோயமுத்தூர் வ.உ.சி. மைதானத்தில் நடை



பெறும் தந்தை பெரியார் 148 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா, 'பெரியார் அறிவுலகம்' கண்ட திரா விட நாயகருக்கு நன்றி பாராட்டு விழாவில் ஏற்பு ரையாற்றி, கோவை மாவட்டக் கழக அலுவலக கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென் னையில் இருந்து விமானம் மூலம் கோவை வருகை தர இருக்கிறார் கள்.

கோவை வருகை தரும் கழகத் தலைவர் திராவிட நாயர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்ட



மன்ற உறுப்பினர், முன் னாள் அமைச்சர் வி. செந் தில் பாலாஜி தலைமையில் ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழகத்தின் சார் பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது

அதுசமயம் ஒருங்கி ணைந்த கோவை மாவட்ட கழக நிர்வாகிகள், தலை மைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், தலை மைக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், ஒன் றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்ட கழக செயலா ளர்கள், பொறுப்பாளர் கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர் கள், துணை அமைப் பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முன்னாள் மக்கள் பிரதி நிதிகள், கழக உடன்பிறப் புகள் அனைவரும் பொது மக்களை அதிக அளவில் திரட்டி கழகத் தலைவர் அவர்களுக்கு உற்சாக வர வேற்பு அளிக்க வேண்டு மாய் கேட்டுக்கொள் கிறோம்.

இவ்வாறு கோவை மாந கர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந் தமிழ்ச் செல்வன், கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முரு கேசன், கோவை வடக்கு மாவட்ட கழக செயலா ளர் தொண்டாமுத்தூர் அ. ரவி ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித் துள்ளனர்.

கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் திறப்பு!

எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் - டாக்டர் வை.முத்துராஜா இனிப்பு வழங்கினர்!

புதுக்கோட்டை நவ.4-

புதுக்கோட்டையில் கழக ஆட்சியில் ரூ.23.25 கோடியில் கட்டி முடிக்கப் பட்ட புதிய பேருந்து நிலை யம் திறக்கப்பட்டது.

ஒரே நேரத்தில் சுமார் 60 பேருந்துகளை நிறுத்தும் வகையில் இந்த பேருந்து நிலையம் கட்டப்பட்டுள் ளது. புதிய பேருந்து நிலை யம் திறக்கப்பட்டதை தொடர்ந்து தி.மு.க. சார் பில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ். ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலா ளர் கே.கே.செல்லப்பாண் டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா ஆகியோர் புதிய பேருந்து நிலையத்தில் பொது மக்க ளுக்கு இனிப்புகள் வழங் கினர். இந்நிகழ்வுகளில் மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் எம்.லியாகத் அலி,.பி.ராஜேஸ்வரி, எஸ். எஸ்.கருப்பையா, தவ.பாஞ் சாலன், மு.க.ராமகிருஷ்ணன், மா.தமிழ் அய்யா, ஆர்.ஆர். சாமிநாதன், ஏ.சுந்தர்ராஜ், இராசு சந்தோஷ், அ.ரெத்தி னம், எம்.எம்.பாலு, இராம. செல்வராஜ், ராய.முத்துக் குமார், செந்தாமரை பாலு, வி.என்.எம்.பாலு, கவிவேந் தன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, பூங்குடி எம்.சிவா, டாக்டர் கே.என்.அமா னுல்லா, வெற்றிச்செல்வன், மா.மணிவேலன், பழனி வேலு, வடவாளம் க.செ. மணிமாறன், என்.ஆர்.பரி மளம், பி.கே.வெங்கடேஷ், சாமி அய்யா, முனியாண்டி, ஆதீஸ்வரன், டி.சுப்பிர மணியன், எம்.கே.அறிவு டைநம்பி, க.செ.கண்ணன், ஏ.எஸ்.கருணாநிதி, ரவீஸ் ரவி, ஞானசேகரன், கலிய முத்து, ராஜேஸ்வரி, செ. கணேஷ், தமிழ்ச் செல்வன், இதயம் அப்துல்லா, எல்ஜிசி ரமேஷ், தங்கமணி, மாலை யீடு பிரபு, ஆர்.எம்.சத்யா, கே.எம்.எஸ்.குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.



நெல்லை மேற்கு மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் நகர தி.மு.க. சார்பில் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் சம்பந்தமாக பொது உறுப்பினர்கள் கூட்டம் வி.கே. புரம் குருபாலா திருமண மண்டபத்தில் நகர அவைத் தலைவர் சு.அதியமான் தலைமையில் நடைபெற்றது.நகர செயலாளர் கி.கணேசன் வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று விரைவில் அம்பை தொகுதிக்கு நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலில் தீவிரமாக களப்பணி ஆற்றி வெற்றி பெற வேண்டும் என்று கூறினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநில நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட துணை செயலாளர்கள் தமயந்தி, மைக்கேல், ஒன்றிய செயலாளர்கள் பரணி சேகர்,ஜெகன், முத்துக்கிருஷ்ணன், அணி அமைப்பாளர்கள் நெடுஞ்செழியன், செல்வ சூடாமணி, பிரேம் ஆனந்த், வழக்கறிஞர் சரவணன் மணிமாறன் உள்பட மகளிர் அணி நிர்வாகிகள்,கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கண்டித்து ஒருங்கிணைந்த கோவை மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் கோவையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு வரும் வழியில் விபத்து ஏற்பட்டு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் கோவை தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் கனிமொழியை கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகியோர் நேரில் சென்று உடல் நலம் குறித்து விசாரித்தனர்.